குறிப்பிட்டார்கள். இதழ் ஆசிரியர் தவறு எப்படி நேர்ந்தது என்று விளக்கியதுடன் தவறுக்கு வருத்தம் தெரிவித்து அந்தச் செய்தியும் இதழ்களில் வெளியிடப்பட்டுள்ளதால் இப்பிரச்சினை இத்துடன் முடிக்கப்படுகிறது.

5. 113-வது விதியின் கீழ் உறுப்பினரின் அறிக்கை.

சாத்தூரில் சில வகுப்பினரிடையே ஏற்பட்ட மோதலையொட்டிச் சிலர் உயிரிழந்ததால் பொது மக்களிடையே ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு 11—4—1990 ஆம் நாளன்று முதலமைச்சர் அளித்த பதிலுரை மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அதுபற்றித் தெரிவித்த கருத்து ஆகியவை குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 113-வது விதியின் கீழ் மாண்புமிகு உறுப்பினர் திரு. குமரி அனந்தன் அவர்கள் ஓர் அறிவிப்பினைத் தந்து இருக்கிறார்கள். அந்த அறிவிப்பினை இப்போது அவையில் வைப்பார்கள்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, இதற்கு முன்னுரை, விளக்க உரை எல்லாம் கிடையாது என்பது எனக்குத் தெரியும். எனவே நான் அதனை அப்படியே படிக்க வேண்டியவனாக இருக்கின்றேன்.

ஒரு ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மீது நேற்று-அதாவது நான் எழுதிய கடிதத்தின் செய்தியை வைத்து 12–4–1990 காலை நானும் நமது மாண்புமிகு உறுப்பினர்கள் சிலரும் கொடுத்த ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மீது மாண்புமிகு முதல்வர் அவர்கள் இருக்கன்குடி கோயிலில் நடைபெற்ற கோயில் திருவிழாவையொட்டி அங்கே சென்றிருந்த நத்தத்துப்பட்டி தேவர் பெருமக்கள் சிலர் ஒரு கடையிலே தொப்பி வாங்க முனைந்தபோது அங்கே இருந்த ஆதிதிராவிடர்களோடு தகராறு ஏற்பட்டு இருக்கிறது: தகராறுக்கு இது காரணம் என்றார்கள். ஆனால் அதே நாள் தமது துறையின் மானியக் கோரிக்கை மீது பேசிய மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள், இருக்கன்குடியைப் பொறுத்தவரையிலும் சிக்கல்கள், தகராறுகளுக்கு எல்லாம் காரணம்—நான் நினைப்பது—அங்கே ஏதோ சாதிக் கலவரம், எப்படியோ தொப்பி வாங்கப் போன இடத்தில் அது ஏற்பட்டது என்று இங்கே சொல்லப்பட்டது. ஆனால் அதைவிட ஒரு ஆழமான ஒரு காரணம் இருக்கக் கூடும் என்று நான் கருதுகிறேன் என்றும், இந்தப் பிரச்சினை வந்த பிறகு அவர்கள் அதாவது முதல்வர் அறிக்கை தயாரித்த பிறகு இதைப் பற்றி பேசவில்லை; பேசி இருந்தால் நான் அவர்களிடத்திலே

சொல்லி இருப்பேன் என்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கூறி இருக்கிறார். ஆழமான புரிபடும் காரணம் இருக்கும் நிலையில் அதை விட்டுவிட்டு தொப்பி வாங்கியதில் தகராறு என்று முதலமைச்சர் கூறிய அந்தத் தகவலை இங்கே சுட்டிக் காட்டிப் பேசவே இந்த அறிக்கையை இங்கே நான் படிக்கின்றேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இது பற்றி தங்களிடம் இருந்து 17–4–1990 தேதியிட்ட கடிதம் எனக்கு வந்தது. மறுநாள் 18–4–1990 தேதியிட்ட கடிதத்தை நான் தங்களுக்கு அனுப்பி இருக்கின்றேன். அதை அப்படியே நான் இங்கே படிக்கின்றேன்.

தாங்கள் ஏப்ரல் 17 ஆம் தேதி எழுதிய கடிதத்தையும் அத்துடன் சட்டமன்ற உறுப்பினர் குமரி அனந்தன் அவர்களின் 12–4–1990 தேதியிட்ட, பேரவை விதி 113-ன் கீழ் எழுப்பிய அறிக்கையின் நகலையும் இன்று நான் பார்த்தேன். இதே பிரச்சினையை மதிப்புமிகு குமரி அனந்தன் அவர்கள் 11–4–1990-ல் சட்டப்பேரவை விவாதத்தின் போது கீழ்க் கண்டவாறு எழுப்பி உள்ளார்.

இருக்கன்குடி கோயிலைப் பொறுத்தவரையில் நல்ல விளக்கங்கள் எங்களுக்குக் தந்தாலும் கூட காலையிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்ன போது அந்தத் திரு விழாவுக்கு வந்தவர்கள் ஒரு கடையில் தொப்பி வாங்கிய விஷயத்தில் ஏற்பட்டது தான் இந்தச் சண்டை என்றும், அதிலிருந்து அது பெருகிப் போயிற்று என்றும், சாத்தூர் வரை பரவிற்று என்றும் சொன்னார்கள். எனவே, முதலமைச்சரவர்கள் சொன்னதைத்தான் நாங்கள் இத்தனை நேரமும் ஏற்றுக் கொண்டிருக்கின்றோம். இப்போது அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் கோயில் சம்பந்தப்பட்ட விழாவோடு தொடர்புபடுத்தி, எனவே, இதற்குச் சிலர் தொப்பிதான் காரணம் என்று சொல்கிறார்கள். நான் அதைவிட வேறொரு காரணம் இருப்பதாகச் சொல்கிறேன். என்று அறங்காவல் குழு நியமித்ததிலேதான் இது ஆரம்பித்தது என்று சொல்கிறார்கள். எனவே, நாங்கள் முதலமைச்சரவர்கள் சொல்வதை எடுத்துக் கொள்வதா அல்லது அறநிலையத் துறை அமைச்சர் சொல்வதை எடுத்துக் கொள்வதா என எது உண்மை என்பதை இந்த அவை அறிவதற்கு அவையிலே. இதுபற்றி அன்றைய விவாதத்திலேயே நான் தெரிவித்த கருத்துக்கள் கீழே தொகுத்துத் தரப்படுகின்றன.

காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் திரு. குமரி அனந்தன் முதலமைச்சரவர்களுக்கும் எனக்கும் முடிச்சு மிக நன்றாகவே போடுகிறார். அந்த முடிச்சு வெற்றிகரமாக ஆகாது என்பதை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்

இங்கே பேசிய உறுப்பினர்கள் தொப்பி வாங்கப் போன இடத்தில் தகராறு ஆரம்பித்தது என்று சொன்னார்கள். நான் மறுக்கவில்லை. மறுக்கவே இல்லை. அதற்கும் ஆழமான ஒரு காரணம் இருக்கலாம். ஒரு சமாதானக் குழு போடும்போது அதையும் சேர்த்துப் பார்க்க வேண்டுமென்றுதான் நான் சொல்கின்றேனே தவிர வேறு இல்லை. இந்தப் பிரச்சினை வந்த பிறகு மாண்புமிகு முதல்வரிடம் இதுபற்றிப் பேச எனக்கு வாய்ப்பு ஏற்படவில்லை. பேசியிருந்தால் நான் அவர்களிடத்திலேயே சொல்லியிருப்பேன். இருக்கன்குடி கோயில் திருவிழாவில் தொப்பி வாங்கப் போன இடத்தில் தகராறு ஆரம்பித்து ஏழு பேர் கொலை செய்யப்பட்டு உள்ளார்கள். அந்தக் கோயிலில் உள்ள பரம்பரை அறங்காவலர்கள் சங்கையா பூசாரி தலைமையிலும், சேதுலிங்க பூசாரி தலைமையிலும் இரு குழுவினராகப் பிரிந்து, கடந்த பத்தாண்டுகளுக்கு மேல் நீதிமன்றங்களிலே வழக்கு தொடர்ந்து வருகிறார்கள். இந்தக் கோயிலுக்கு வரக்கூடிய பல இலட்சக் கணக்கான ரூபாய் வருமானத்தில், நிர்வாகத்தில் இருக்கும் பரம்பரை அறங்காவலருக்குப் பங்கு தர ஒரு நீதிமன்றத் திட்டம் இருக்கிறது. ஆகவே, நிர்வாகத்தினைப் பிடிப்பதற்கு இந்த இரண்டு குழுவினரிடையே போட்டி நிலவுகிறது. இந்தப் போட்டியையும் ஒரு முடிவுக்குக் கொண்டு வருவது, அந்தக் கோயில் திருவிழாக்களிலே தகராறு ஏற்படுவதை நிரந்தரமாகத் தடுப்பதற்கு வழிவகை செய்யும். இந்தக் கோயில் பரம்பரை அறங்காவலர்கள் ஒழுங்காக இயங்கினால் அங்கே சட்டம் ஒழுங்கு இந்த அளவிற்குச் சீர்கெடாத படி பார்த்துக் கொள்ள முடியும் என்று நான் சொன்னேன்.

10-45 மணி

பேரவை விதி 113-இன் கீழ், நான் அவைக்குத் தந்த தகவல்களில் தவறு Mistake அல்லது பிழை Inaccuracy இருந்தால்தான் ஒரு உறுப்பினர் அதைச் சுட்டிக்காட்ட முடியும். இதுபற்றி நான் அவைக்குத் தந்த அறிக்கை—தகவல்களில் ஏதோ தவறோ அல்லது பிழையோ இல்லை.**

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இத்துடன் இப்பிரச்சினை முடிவுக்கு வருகிறது.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.